பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை 20.10.2023 கதிர் 343

# துறைமுக நகர், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்திக்குச் சீனா உதவும்

## அந்த நாட்டு துணைப் பிரதமர் உறுதியளிப்பு

மண்டலம் மற்றும் பதை முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகத் சீன துணைப் பிரதமர் டிங் சுசியாங் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இரண்டு திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படும் என நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சீன துணைப் பிரதமருக்கும் இடையில் நேற்று பீஜிங் நகரில் இடம்பெற்ற, இருதரப்பு பேச்சின்போதே சீன துணைப் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சீன மக்கள் குடியரசுடன் இறப்பர் அரிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இலங்கை, தங்களுக்கு வழங்கிய ஆதரவை சீன மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்றும், சீனா இலங்கைக்கு தனது ஆதரவை எப்போதும் வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சீன - இலங்கை இறப்பர் அரிசி ஒப்பந்தம் இலங்கை செய்து கொண்ட முதலாவது வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கை என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இரு நாடுகளினதும் பொதுவான கொள்கைகளுக்கு அமைவாக புதிய வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின்போது, சீனா வழங்கிய ஆதரவை ☞2



## இனிது ரகசியம் அல்ல!

அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட்டின் நாடாளுமன்றப் பதவி பறிபோனது. அவர் கட்சி தாவி ஆளும் தரப்புப் பக்கம் சென்று அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டதை அடுத்து அவர் கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டிருந்தார். அதனை எதிர்த்து அவர் தாக்கல் செய்த வழக்கில் கட்சியின் நடவடிக்கை சரியானதே என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் அவர் தனது நாடாளுமன்றப் பதவியை இழக்கவேண்டியவரானார்.

இந்தத் தீர்ப்பு எதிர்க் கட்சியினரால் அமோகமாகக் கொண்டாடப்பட்டது. வழக்கமாக இப்படிக் கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சாதகமாகவே நீதிமன்றம் தீர்ப்பளித்துவந்த நிலையில், இந்த வழக்கில் நஸீர் அகமட்டின் வாதத்தை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இது, கட்சி தாவி ஆளும் தரப்பில் அமைச்சுப் பதவிகளைப் பெற்ற வேறு பலருக்கும் எதிர்காலத்தில் பிரச்சினையாக அமையும் என்பதே எதிர்க் கட்சிகளின் கொண்டாட்டத்திற்குக் காரணம்.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டுவிட்டு பின்னர் ரணிலிடம் தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மனு நாணயக்கார, ஹரீன் பெர்னான்டோ, டயானா கமகே ஆகியோரும் நஸீர் அகமட் ☞2

# பாலஸ்தீன தூதுவரிடம் தமது கவலையை தெரிவித்த ரிஷாட்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன், இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதரகத்தில், தூதுவர் கலாநிதி. ஸுஹைர் எம்.எச்.டார் செயிட்டை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

எல்லை மீறிய இஸ்ரேலின் எதேச்சாதிகாரப் போக்குகளால், காஸாவில் ஏற்பட்டுள்ள அவலங்கள் குறித்து, தனது ஆழ்ந்த கவலையையும் இதன்போது அவர் தெரிவித்தார்.

மேலும், போர் விதிகளை மீறி இஸ்ரேல் கட்டவிழ்த்துள்ள வான் தாக்குதல்களை கண்டிப்பதுடன், முஸ்லிம் உலகம் ஒன்றுபட்டு ஸியோனிஸவாதிகளை எதிர்க்க ஆயத்தமாக வேண்டும் என்றும் பலஸ்தீனத் தூதுவரிடம் அவர் குறிப்பிட்டதுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் குற்றுயிராகக் கதறும் சகோதரர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி மற்றும் ஹலீம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# தேர்தல் மற்றும் ஜனநாயகத்தில் ஜனாதிபதியின் தலையீடு கூடாது

## இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு கண்டனம்

தேர்தலைத் தாமதப்படுத்துவதற்காக தேர்தல் முறை மறுசீரமைப்பு மீளாய்வுக் குழுவைப் பயன்படுத்தவேண்டாம் என்று இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. அத்தோடு தேர்தல் மற்றும் ஜனநாயகத்தில் ஜனாதிபதி தலையிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் முறையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வது குறித்து ஆராய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழு தொடர்பில் தனது கவலையை வெளிப்படுத்தி அந்த அமைப்பு ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்செகுலரத்ன, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி ஜெஃப்ரி அழகரத்தினம், ஜனாதிபதி சட்டத்தரணி டினால் பிலிப்ஸ் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர், ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும, சட்டத்தரணிகளான கே.டபிள்யூ. ஜனரஞ்சன ஸ்ரீநாத் பெரேரா, எர்மிசா டெகல், மனோஜ் நாணயக்கார ஆகியோர் கையொப்பமிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் மறுசீரமைப்பு குறித்து ஆராய்ந்து சிபாரிசுகளை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இத்தகைய ஓர் ஆணைக்குழுவின் நியமனம் குறித்து கடுமையான கவலையை வெளிப்படுத்துகிறோம். அரசமைப்பு ரீதியில் தேர்தலை நடத்துவதற்கான நடைமுறைகளை தாமதப்படுத்துவதற்கு இந்த ஆணைக்குழுவை சாக்குப்போக்காக பயன்படுத்த வேண்டாம்.

அரசியல் ஆதாயத்திற்காக தேர்தல்கள் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றில் ஜனாதிபதி மேலும் தலையிடாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றுள்ளது.

# நாடாளுமன்ற செங்கோலை அவமதித்த மான்னப்பெரும எம்.பிக்கு 4 வார தடை

நாடாளுமன்ற செங்கோலை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெருமவை நாடாளுமன்றத்திலிருந்து 4 வாரங்கள் இடைநிறுத்தியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் தொடங்கப்பட்ட நிலையில், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வாய்மூலமான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தின்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நேரம் 10.30ஐ கடந்து சென்றுள்ளதால் விரைவாக பதில்களை வழங்குமாறு அமைச்சர் டிரானிடத்தில் கோரினார். அதன்போது, அமைச்சர் டிரான் நேரம் ☞2

# தொழில்நுட்பத்துறையில் 20 ஆயிரம் வெற்றிடங்களுக்கு பணியாளர் இல்லை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் தகவல் தொழிநுட்ப துறையில் வருடாந்தம் இருபதாயிரம் வேலை வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பயிற்சி பெற்ற பணியாளர்கள் பற்றாக் குறையாக இருப்பதாகவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை தகவல் தொழிநுட்ப தொழிற்துறை சம்மேளத்தின் கல்விப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'சர்வதேச கல்வி மன்றம் - 2023' குறித்து ஊடகங்களுக்கு அறிவிப்பதற்காக நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் ☞2

# விசாரணை இல்லை

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுக்காதிருக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை என சபாநாயகர் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்பைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் அதற்கெதிரான மனுக்களை விசாரிப்பதில்லை என்கிற முடிவுக்கு வந்துள்ளது.

குறித்த சட்டமூலத்தினை நீதிமன்றத்தினால் விசாரணைக்குளடுத்துக்கொள்ள முடியாது என ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழு அறிவித்துள்ளது. ☞2

# ஜனநாயகத்திற்கு மதிப்பு இல்லை பின்னர் நாடாளுமன்றம் எதற்கு?

## அஜித் மான்னப்பெரும எம்.பி. பொருமல்



ஜனநாயகத்திற்கு மதிப்பு இல்லை என்றால் நாடாளுமன்றம் எதற்கு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

சபை நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு இடைக்கால தடை உத்தரவு ☞2

# நாடாளுமன்ற தேர்தல் மறுசீரமைப்பு குறித்து பிரதமர் தலைமையில் ஆய்வு



நாடாளுமன்றத் தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பில் அண்மையில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடனான கலந்துரை யாடல் ஒன்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதன்கிழமை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எந்தவித முடிவுகளும் எட்டப்படாத நிலையில் அடுத்த வாரம் மீண்டும் கூடி ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. கலந்துரையாடலின் முடிவில் தயாரிக்கப்படும் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான யோசனைகளை அமைச்சரவையில் முன்வைத்த நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். ☞2

# தேவையான எரிபொருள் இருப்பு உண்டு



நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை, அவசியமான எரிபொருளுக்கான கேள்விப்பத்திரச் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டதால் அது வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் ☞2

# மின் கட்டணங்களை அதிகரிப்பதில் மின்சார சபை தொடர்ந்து விடாப்பிடி

மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியே ஆகவேண்டும் என்று இலங்கை மின்சார சபையின் மேலதிக பொதுமுகாமையாளர் ஹேமந்த ரணசிங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஆணைக்குழுவுடனான கலந்துரையாடலின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தின் ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மழை பெய்யும் பட்சத்தில் நீர்மின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 1.5 சதவீதமளவிற்கு நீர்மின் உற்பத்தி குறைந்துள்ளது.

இவ்வருடத்தின் ☞2

# இஸ்ரேல் - பலஸ்தீன போரை நிறுத்த ஐ.நாவை தலையிடக் கோரி விவாதம்

## நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் தீர்மானம்

இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக தலையிடுமாறு கோரும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்றையதினம் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். ☞2



# மயிலத்தமடுவில் வைக்கப்பட்ட புத்தர் இரவோடிரவாக அங்கிருந்து அகற்றம்

## அந்த இடத்தில் அதிரடிப்படையினர் தீவிர பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டம், மயிலத்தமடுவில் அனுமதியின்றி வைக்கப்பட்ட புத்தர் சிலையை இலங்கைப் பொலிஸார் அங்கிருந்து இரவோடு இரவாக அகற்றியுள்ளனர்.

மயிலத்தமடு மாதவனையில் தமிழர்களின் மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களவர்கள் குடியேற்றப்படும் விடயம் பெரும் பிரச்சினையாக உருமாறி இருக்கின்றது. இதற்கு எதிராகத் தமிழ் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்தின் ஊடாக அணுகித் தீர்க்குமாறு ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போன்றே தமது கட்சி தமக்கு எதிராக எடுத்த ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்துவிட்டு அதன் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள்.

நஸீர் அகமட்டின் வழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காகத் திறம்பட வாதாடி வென்றுகொடுத்தவரான தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனையே இந்த வழக்குகளிலும் வாதாடுவதற்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியினர் வலிந்து அழைத்துச் சென்றனர் என்பதெல்லாம் அந்த வெற்றிக் களிப்பின் விளைவுகளே.

இருந்தாலும், கடந்த வாரம் மனு மற்றும் ஹரீனின் வழங்குகள் விசாரணைக்கு வந்தபோது கட்சிச் செயலாளரின் கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கத் தமக்கு அவகாசம் வேண்டும் என்று வழக்காளிகள் அவகாசம் கோரினர். ஆனால் பதிலை உடனடியாக அணைக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் வழக்கை இரண்டு மாதங்கள் கழித்து மீண்டும் விசாரணைக்கு நியமித்தது.

இப்படி நஸீர் அகமட்டின் வழக்கு எதிர்க் கட்சியினருக்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதைப் போன்றே ஆளும் தரப்புக்குள்ளும் புத்துணர்ச்சியை ஊட்டியிருப்பதுதான் இங்கு முக்கிய செய்தி. ஆளும் கட்சியான பொது ஜன பெரமுன, ராஜபக்க் கள் ஆட்சியில் இருந்த கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து மேய்ப்பர் இல்லாத ஆட்டுமந்தை போன்று சிதறி விட்டது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல அணிகளாகப் பிரிந்து செயற்படுகின்றனர்.

டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் கொஞ்ச நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திர மக்கள் சபை என்கிற பெயரில் தனியாக இயங்கி வருகின்றனர். விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தனியாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து செயற்படுகின்றனர். நிமல் லன்ஸா, பிரியதர்சன யாப்பா போன்றோர் தம்மோடு வேறு சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றனர். சிலர் ஆட்சியில் பங்கெடுத்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளனர். பொது ஜன பெரமுனவின் பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தனியாக எதிர்க் கட்சியினர் வரிசையில் சென்று அமர்ந்திருக்கின்றனர்.

நஸீர் அகமட்டின் தீர்ப்பை வைத்து இவர்களை எல்லாம் மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று உற்சாகமடைந்திருக்கிறது மொட்டுக் கட்சி. இது தொடர்பில் கடந்த வாரம் மொட்டுக் கட்சித் தலைமை தீவிரமாக ஆராய்ந்துள்ளது. நஸீர் அகமட்டின் வழக்கில் முக்கிய விடயமாக இருந்தது கட்சியின் தீர்மானத்தை மீறி அவர் ஆளும் தரப்புக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் ஆதரவளித்த விவகாரம். இந்த அடிப்படையைப் பயன்படுத்தியே தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான பிடியை இறுக்கலாம் என்று மொட்டுவும் திட்டமிடுகின்றது.

அதாவது, அடுத்து வரவுள்ள வரவு - செலவுத் திட்டத்தை மொட்டுக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரிக்கவேண்டும் என்கிற தீர்மானத்தை கட்சியில் எடுத்து விட்டு, அப்படி ஆதரவு தெரிவிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றிவிடுவோம் என்று மிரட்டுவதன் மூலம் அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவர முடியும் என்கிற யோசனை மொட்டுவின் தலைமைச் சபையில் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மொட்டுக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த நிலையில் தற்போது 117 உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே தக்கவைத்துள்ளது. அதிலும் கடைசியாக சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஆளும் தரப்பினர் சார்பில் 103 பேர் மட்டுமே வாக்களித்திருந்தனர். இப்படிச் சிந்திச் சிதறிக் கிடக்கும் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களை நஸீர் அகமட் வழக்கைக் காட்டியே வழிக்குக் கொண்டுவர முயன்று பார்க்கலாம் என்கிற மொட்டுவின் இந்தத் திட்டம் பெரு வெற்றியைத் தருவதற்கு வாய்ப்பில்லை என்கிறார்கள் சட்டம் அறிந்தவர்கள். அதற்குப் போதிய கால அவகாசம் இல்லை என்பது அவர்களின் வாதம்.

பார்க்கலாம் அடுத்த வருடத்தில் இது தொடர்பில் என்னென்ன நகர்வுகளில் எல்லாம் கட்சிகள் ஈடுபடப்போகின்றன என்று.

- இடிமின்னல் -
(idiminnal23gmail.com)

## துறைமுக நகர், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெரிதும் பாராட்டுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை – சீன நட்புறவு கடந்த காலத்திலிருந்து வலுவான மட்டத்தில் இருந்ததாகவும், ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் கீழ் அது மேலும் வலுவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அடையாளத்தையும் அமைதியையும் பாதுகாப்பதில் இலங்கை மிகுந்த கவனம் செலுத்துவதாகவும், இந்து சமுத்திரம் அதிகாரப் போட்டிக்கு பலியாவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்பதையும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேபோல், பிராந்திய பொருளாதார உறவுகளுக்கான (யூஎீசிஐண) அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின் இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினருக்கு சீன துணைப் பிரதமர் இரவு விருந்தொன்றையும் வழங்கினார்.

## நாடாளுமன்ற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்துள்ளமையால் தான் பதில்களை சபாபீடத்தில் சமர்ப்பிப்பதாக அறிவித்தார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பிய எதிர்க்கட்சியின் பிரதம கொரடா நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அமைச்சர் சபையில் பிரசன்னமாகியிருப்பதால் பதில் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், வாய்மொழி மூலமான விடைக்கான கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்க வேண்டியது அவசியம் என்றார். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும கேள்வியைத் தொடுத்த சந்தர்ப்பத்தில் அமைச்சரிடம் பதிலளிக்குமாறே நீங்கள் (சபாநாயகர்) குறிப்பிட்டீர்கள். அநுரகுமார கேள்வியைத் தொடுக்க முனைந்தபோது அதனை தடுத்து நிறுத்தி பதில்கள் சபையில் சமர்ப்பிக்குமாறு கூறியதைப்போன்று செயற்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து இரண்டு மூன்று தடவைகள் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அமைச்சர் டிரானை கோரியபோதும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறு பதில் வழங்கப்பாடமை காரணமாக அமைதியின்மை ஏற்பட்டது. அப்போது பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும, செங்கோலைத் தூக்குவதற்கு முயற்சித்தார். இதனால் ஆளும் எதிர்ப்புத் தரப்பினர் கோசங்களை எழுப்பியதால் 10 நிமிடங்களுக்கு சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

இந்நிலையில் 10 நிமிடங்களின் பின்னர் அமர்வு மீண்டும் ஆரமப்பிக்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும நிலையியற்கட்டளை 73இன் கீழ் 3இன் பிரகாரம் நாடாளுமன்ற செங்கோலை அவமதிக்கும் வகையில் பாரதூரமாகச் செயற்பட்டதோடு, அதன் மீது கைவைத்தமை உறுதியாவதாக தெரிவித்த சபாநாயர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவரை 4 வாரங்களுக்கு சபை அமர்வுகளிலிருந்து இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

அத்துடன் அனைத்து உறுப்பினர்களும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## மின் கட்டணங்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதலாறு மாதங்களில் போதிய மழை வீழ்ச்சி கிடைக்காமையின் காரணமாக 90 பில்லியன் மேலதிகமான செலவு ஏற்பட்டது.

2023ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரையிலான காலப்பகுதியில் நூற்றுக்கு ஒரு வீதத்தினை மாத்திரமே நாம் அதிகரித்துள்ளோம். அது ஆறு மாதங்களுக்கான குறைந்தபட்ச அதிகரிப்பாகும். தற்போதைய கட்டணத்தை அவ்வாறாகப் பேண முடியாது.

தற்போதைய கட்டணத்தினை 17 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச சந்தையில் நிலக்கரி மற்றும் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கலாம்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி குறைவடையலாம். நாம் அந்த விடயங்களையெல்லாம் உள்வாங்கியுள்ளோம். அதன் காரணமாகவே, தற்போதைய மின்சாரக் கட்டணத்தில் 17சதவீதமான அதிகரிப்பையும், ஏற்கனவே காணப்பட்ட மின்சார கட்டணத்தில் ஒரு வீதமான அதிகரிப்பையும் கோரியுள்ளோம் என்றார்.

## மயிலத்தமடுவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அண்மையில் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்தப்பகுதியிலிருந்து சிங்களவர்களை வெளியேற்றுமாறு கோரி தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியதை அடுத்து அங்கு ஒரு புத்தர் சிலையை மட்டக்களப்பு அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் வைத்தார்.

இந்த விவகாரம் பெரும் மயிலத்தமடு சர்ச்சையை மேலும் தீவிரமாக்கியிருந்தது. அங்கு புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு தமிழ் மக்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் புதன்கிழமை இரவு பொலிஸார் இந்த புத்தர் சிலையை அகற்றியிருக்கின்றனர். அந்தப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டு பலத்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

புத்தர் சிலை அகற்றப்பட்டதை அறிந்த அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் அப்பகுதிக்கு வாகனத்தில் வந்துள்ளார். எனினும், வாகனத்திலிருந்து அவரை கீழே இறங்க பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், கடுமையான வார்த்தைகளால் பொலிஸாரைத் திட்டித்தீர்த்துள்ளார்.

## தொழில்நுட்பத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சர்வதேச கல்வி மன்றம் – 2023 இன்போடெல் ஐசிரி கண்காட்சியுடன் இணைந்து நவம்பர் மாதம் 3 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற உள்ளது.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் தற்போதுள்ள கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்பது பலரது கருத்து. இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை சம்மேளனம் இவ்வாறானதொரு செயலமர்வை ஏற்பாடு செய்வது காலத்திற்கேற்ற நடவடிக்கையாகும்.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்திற்கு தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய நிபுணர்களின் ஆதரவு மிகவும் முக்கியமானது. புதிய தொழில்நுட்பத்துடன், தற்போதுள்ள கல்வி முறையும் மாற வேண்டும். தொழிநுட்ப துறையில் வருடாந்தம் 20,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழிநுட்ப துறையில் பத்தாயிரம் பணியாளர்கள் மாத்திரமே உள்ளனர்.

நம் நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையில் வல்லுனர்களுக்கு அதிக இடைவெளி உள்ளது. அந்த இடைவெளியை நிரப்ப வேண்டும். இதற்கு உயர்தரப் பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர்களைப் பயன்படுத்தி இடைவெளியை நிரப்புவது மிகவும் அவசியம். எமது ஆட்சி அதில் கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, 2030ஆம் ஆண்டுக்குள் தேசிய டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை உருவாக்கும் முதன்மை நோக்கத்துடன் டிஜிகொன் - 2030 திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த சர்வதேச கல்வி மன்றம் ஆட்சியாளர்களின் திட்டத்தை அடைய ஒரே நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களில் ஒன்றாக அழைக்கப்படலாம்.

நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை முன்னெடுப்பதில், இந்நாட்டில் கல்வித் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. எனவே, அனைத்து இளைஞர்களும், மாணவர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## நாடாளுமன்ற தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி, சட்டத்தரணி சாகர காரியவசம், மஹிந்த அமரவீர, ஏ.எல்.எம். அதாவுல்லா, எஸ். சந்திரகாந்தன் , ஏ.அரவிந்த் குமார், எம். ராமேஸ்வரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், றிசாத் பதியுதீன், மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும், அங்கஜன் இராமநாதன், ஷான் விஜயலால் டி சில்வா , சரதி துஷ்மந்த, டலஸ் அழகப்பெரும, ஜயந்த சமரவீர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, உதய கம்மன்பில, வணக்கத்திற்குரிய அதுரலியே ரத்தின தேரர், அசங்க நவரத்ன, வீரசுமண வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## இஸ்ரேல் - பலஸ்தீன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கு அமைய நாளையதினம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்காது மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரையும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டது. ஆளும் கட்சி எதிர்க் கட்சியினரின் பொதுவான இணக்கப்பாட்டுடன் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அமைய விவாதம் நடத்தப்படும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ உதய கம்மன்பில இதற்கான பிரேரணையை முன்மொழிய, ஆளும் கட்சியின் சார்பில் இது வழிமொழியப்படும் எனவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலுக்கு உடனடி போர் நிறுத்தத்தை அறிவிக்க அனைத்து தரப்பினரையும் கோர வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த போர்நிலைமை சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் வகையில் அமைந்திருப்பதுடன், இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர், இலட்சக்கணக்கான மக்கள் காயமடைந்து இடம்பெயர்ந்துள்ளனர், பெருமளவிலான இலங்கையர்கள் மத்திய கிழக்கில் பணிபுரிகின்றமை, உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளிட்ட விளைவுகள் ஏற்பட்டிருப்பதால் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி விவாதம் நடத்தப்படுகிறது.

அதேநேரம், நாளையதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2323/41ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் 2294/54 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்குக் காணப்படும் அதிகாரங்களுக்கு அமைய பிரசுரிக்கப்பட்ட 2354/08 ஆம் இலக்க வர்த்தமானி என்பவற்றை விவாதமின்றி அங்கீகரிப்பதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

## விசாரணை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய மக்கள் சக்தியின் (NPP) நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## தேவையான எரிபொருள் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கை யில்,

கடந்த காலங்களில் எமது நாடு பாரிய எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. எரிபொருள் வரிசைகள் ஏற்பட்டன. அதேபோன்று விமானங்களுக்கு அவசியமான எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அதனால் நாடு பெரும் சிக்கலுக்கு உள்ளானது. ஆனால் மிகவும் குறுகிய காலத்திலேயே அந்த நிலையில் இருந்து முழுமையாக மீண்டுவர எம்மால் முடிந்தது.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என்பது, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்த மாதமாகும். அன்று ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 50 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

ஆனால் தொடர்ந்து வந்த நான்கு, ஐந்து மாதங்களுக்குள் அது 65 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. அதன் பின்னர் ரஷ்யா - உக்ரைன் யுத்தம் காரணமாக ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை சுமார் 100 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது.

அதன் பின்னர் கடந்த காலங்களில் ஏற்பட்ட சர்வதேச நிலைமைகள் காரணமாக அது 80 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்தது. எனவே 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குறைவாக இருந்து, படிப்படியாக அதிகரித்து வந்த மசகு எண்ணெய் விலை, இந்த வருடம், ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் ஓரளவு குறைந்துள்ளது. குறிப்பாக இந்த மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து ஆறாம் திகதி வரை உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை சுமார் 4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

ஆனால் அண்மையில் காசா பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக உலக சந்தையில் அனைத்து எரிபொருள் வகையினதும் விலை, கிட்டத்தட்ட 4 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்துள்ளது. நீண்ட காலத்திற்குப் பிறகு எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்குள்ளேயே கைநழுவி விடும் நிலை தோன்றியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகள் எரிபொருள் உற்பத்தி அல்லது உலக சந்தைக்கு எரிபொருள் விநியோகிக்கும் நாடுகள் இல்லாவிட்டாலும் கூட ஈரானிலும் இந்த மோதல் சூழ்நிலையின் பதட்டம் காணப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்கால உலக சந்தை நிலவரங்கள் தொடர்பான பகுப்பாய்வுகளை மேற்கொள்வது மிகவும் கடினமாகவே உள்ளது.

அடுத்த வருடம் ஜூன் மாதம் வரை அவசியமான எரிபொருளுக்கான டெண்டர் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக எமக்கு அவசியமான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக 200 மில்லியன் டொலர்கள் கையிருப்பை நாம் பேணிவருகின்றோம். இதன் காரணமாக விநியோகஸ்தர்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதுடன், அதன் மூலம் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி விநியோகிக்க முடியும்.

மேலும், எரிபொருள் கொள்வனவுக்காக கடந்த காலங்களில் பெற்றிருந்த கடன்களை மீளச்செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் சுத்திகரிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

அதேபோன்று, எமக்குத் தேவையான அனைத்து வகையான எரிபொருள்களையும் ஒன்று அல்லது ஒன்றரை மாதங்களுக்கு சேமித்து வைக்கும் களஞ்சிய வசதியே எம்மிடம் இருக்கின்றது. அதன் காரணமாக உலக சந்தையில் விலை குறையும்போது அதன் பலனை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளதால், களஞ்சிய வசதியை அதிகரிக்கவும் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்நாட்டில் எரிபொருளை விநியோகிக்கும் வாய்ப்பை சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் வருடத்திற்கு சுமார் 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாட்டில் சேமிக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.' என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir

# அரச நிறுவனங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் மூலம் இழைக்கப்பட்ட நிதியை மீளப் பெறுவது சாத்தியமற்றது

## லசந்த அழகியவண்ண தெரிவிப்பு



தகவல் தொழில்நுட்பத்தை உபயோகித்து நிறுவனங்கள் இணைந்த தரவுத் தொகுதியை செயற்படுத்தினால் மாத்திரமே அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகளை நிறுத்த முடியும், அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் மூலம் இழக்கப்பட்டுள்ள நிதியை மீண்டும் பெற்றுக் கொள்வது சாத்தியமற்றது என கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கோபா குழுவின் 100ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

100 வருடங்களுக்குப் பின்னர் கோப் குழுவின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளை பலப்படுத்தி காலத்திற்கு பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய தேவையாக உள்ளது.

அதற்கான சட்டமூலத்தை ஆளும் கட்சி சபையில் சமர்ப்பித்துள்ளதுடன் எதிர்க்கட்சிகள் அது தொடர்பில் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தன. மேற்படி தெரிவுக் குழுவை பலப்படுத்தி நிலையியற் கட்டளையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

பெரும்பாலான நிறுவனங்களில் அந்த நிறுவனங்களுக்கான நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை. வேறு வேறு நோக்கங்களே அங்கு நிறைவேறுகின்றன. பல நிறுவனங்களும் திணைக்களங்களும் அவ்வாறே செயற்படுகின்றன.

அதனால் நிதி தொடர்பில் நாம் ஆராய்வது போன்று அந்தந்த நிறுவனங்களில் இடம்பெற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் ஆராய வேண்டியுள்ளது. அந்தந்த நிறுவனங்களின் இலக்குகள் குறித்த வருடங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதும் எதிர்காலத்தில் எமது செயற்பாடாகும்.

அத்துடன் நாம் அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்கின்றோம். பின்புலங்கள் தொடர்பில் ஆராய்கின்றோம். எனினும் தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் மூலமே நிறு வனங்களின் மோசடிகள், முறைகேடுகளை நிறுத்த முடியும்.

அதன் ஓர் அம்சமாக நாம் 17 அரச நிறுவனங்களை இணைத்துக்கொண்டு குழுவொன்றை அமைத்துள்ளோம். நாம் மூன்று மாதத்துக்கு ஒரு முறை அதனைக் கூட்டி அந்த 17 நிறுவனங்களினதும் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் தரவுகளை ஏற்படுத்துவது அவசியம்.

உதாரணமாக சுங்கத்தில் வந்து இறங்குவதோ ஒரு வாகனம் ஆனால் பதிவு செய்வதோ வேறு ஒரு வாகனம். அவ்வாறு ஆயிரம் வாகனங்கள் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

அவ்வாறு வாகன மோசடியில் ஈடுபடுபவர்கள் 40 லட்சம் வரி செலுத்த வேண்டிய வாகனத்திற்கு பத்து லட்சம் வரியை செலுத்தி அதற்கான காரணங்களையும் காட்டுகின்ற நிலையே காணப்படுகிறது. தொழில்நுட்ப உபயோகம் இன்றி இது போன்ற மோசடிகளை நிறுத்த முடியாது. - என்றார். (05)

# மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிரதீவன் அச்சுறுத்தலுக்குள்ளானமை கண்டிக்கத்தக்கது

## சிறிதரன் கடும் விசனம்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழரின் உரிமைகள், தமிழ் தேசம் தொடர்பில் குரல் கொடுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். மனித உரிமைகள் செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவன் விசாரணை என்ற பெயரில் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகின்றமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீதித்துறைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் நாட்டில் நீதி உள்ளதா, நீதிமன்றங்களின் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா, நீதிபதிகள் மற்றும் குடிமக்கள் பாதுகாக்கப்படுகிறார்களா? என்பது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் முன்னேற்றம் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீதி இல்லாத, நீதி பேசாத, நீதி இயங்காத நாடாகவே இலங்கை தற்போது காணப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் கல்முனையைச் சேர்ந்த மனித உரிமை சார்ந்து செயல்படுகின்ற சிவில் சமூக செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவன் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறுகின்ற அநீதிகளுக்காகவும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காகவும் தமிழர் தேச அத்துமீறல்கள் மற்றும் ஏனைய அனைத்து மனித உரிமை மீறல்களுக்காகவும் நீதி கேட்டு குரல் கொடுத்துப் பல்வேறு செயல்பாட்டுத் தளங்களிலும் நின்று செயல்பட்டு வருகின்ற ஒரு செயற்பாட்டாளர்.

கடந்த 2023.10.12 ஆம் திகதி அவர் ஊரில் இல்லாத நேரம் அவரது வீட்டிற்கு சென்றிருந்த பொலீஸார் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் (டி.ஐ.டி) விசாரணை இருப்பதாகவும் அதற்கு அழைப்புக் கடிதம் தர வேண்டும் எனவும் கூறி அவரையும் அவரது குடும்பத்தாரையும் விசாரித்துள்ளதோடு அவரது தம்பியின் தொழில் நிலையத்திற்கும் சென்று விசாரணை அழைப்பை வழங்கியுள்ளனர்.

பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணை பிரிவு சிங்கள மொழியில் விசாரணை அழைப்பாணை அனுப்பியுள்ளார்கள். இதற்கு முன்னரும் கூட இவருக்கு இது போன்று நான்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக 2023.01.25 ஆம் திகதி காலை 9:30 மணிக்கு இலக்கம் சி - 02 அரச விடுதி அம்பாறை எனும் விலாசத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அந்த நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அங்கு இருந்த அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு நான்கு மணித்தியாலங்களும் 48 நிமிடங்களும் நடந்ததோடு சுமார் 24 பக்க விசாரணை அறிக்கை அவர்களால் அவரிடம் இருந்து பெறப்பட்டு எழுதப்பட்டது .

அதன் பின்னர் 2023.04.15 ஆம் திகதியும் அவரது வீட்டிற்கு பெரியநீலாவணை பொலீஸ் நிலையத்தில் இருந்து இரண்டு பொலீஸ் அதிகாரிகள் சீருடையில் வருகை தந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினர் மற்றும் தங்கள் உயர் அதிகாரிகள் தங்களை அனுப்பி விசாரிக்கச் சொன்னதாகவும் கூறி விசாரணைக்கு உட்படுத்தி சுமார் இரண்டு மணி நேரம் விசாரணை அறிக்கை எழுதியிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து இப்போது இந்த அழைப்பு வழங்கப்பட்டிருக்கிறது இந்த அழைப்பு சிங்கள மொழியில் வழங்கப்பட்டு இருக்கிறது இதில் சிங்களத்தில் தேசிய பாதுகாப்புக்கு இடையூறாக இருந்தமை தொடர்பாடல் செய்தமை போன்ற விடயங்கள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்றும் அதற்கான விசாரணை பிரிவு 2023.10.16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 149, 3வது மாடி கப்பிட்டல் பில்டிங், கிருலப்பனை, கொழும்பு 05 எனும் முகவரியில் 01 ஆம் இலக்க விசாரணை அறைக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக இதற்கு முன்னரும் கூட நான்கு முறை இவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள் விசாரணை செய்திருக்கிறார்கள் இதுபோன்று பல போலீஸ் விசாரணைகள் சி.ஐ.டி.விசாரணைகளையும் செய்திருக்கிறார்கள் அதனை தொடர்ந்து இப்போதும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள் விசாரணைக்கு என்று இவ்வாறு தொடர்ச்சியாக இந்த நாட்டிலே இருந்து செயற்படுகின்ற இவர்களைப் போன்ற செயற்பாட்டாளர்களுக்கு விசாரணை எனும் பெயரிலே தொடர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு கொண்டிருப்பதும் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருப்பதும் வேதனையான ஒரு விடயம் என்பதோடு இவ்வாறான விடயங்கள் தொடர்ச்சியாக இடம்பெறாமல் இருப்பதற்கு உரிய ஆவண செய்யப்பட வேண்டும் என இந்த உயரிய சபையைக் கேட் டுக்கொள்கின்றேன். மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களுக்கு விசாரணை என்ற பெயரில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போது இந்த நாட்டில் எவ்வாறு அச்சமில்லாமல் வாழ முடியும். தாமோதரம் பிரதீபனுக்கு வழங்கப்பட்ட அழைப்பாணை கடிதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடிதங்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த நாட்டில் தமிழ் இளைஞர்கள் செயற்பட முடியாத அளவுக்கு பாதுகாப்பு தரப்பினரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இது முற்றிலும் விரோதமானது. - என்றார்.(05)

# மாங்குளம் ரயில் சேவையை விஸ்தரித்தால் முல்லைத்தீவு மக்கள் நன்மையடைவார்கள்!

## மாவட்ட மேலதிக அரச அதிபர் கோரிக்கை

மாங்குளம் ரயில் சேவையை விஸ்தரித்தால் மாவட்ட மக்கள் நன்மையடைவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

பயணிகளின் நலன் கருதி மாங்குளம் ரயில் நிலையத்தில் நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மாங்குளம் ரயில் நிலையத்தில் பயணிகளின் நலன் கருதி நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்திலே ஐந்து மாவட்டங்கள் இருக்கின்றன. ஐந்து மாவட்டங்களிலும் பெரிய மாவட்டமாக இருப்பது முல்லைத்தீவு மாவட்டம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரேயொரு ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையமே இருக்கின்றது. ஏனைய ரயில் நிலையங்களுடன் ஒப்பிடும்போது சேவை வசதிகள் மிகவும் குறைவான நிலையிலே காணப்படுகின்றது. அதனை உணர்ந்து கொண்டு ரயில் நிலைய அதிபர்கள் தம் முயற்சியால் மக்களுக்கு நல்ல முறையில் சேவை வழங்கக்கூடிய ரயில் நிலையமாக அதனை மாற்ற முயற்சித்திருக்கின்றார்கள். அங்கே நூலக வசதி , சுத்தமான குடிநீர் வசதி போன்ற நல்ல விடயங்களை செய்திருக்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் ரயில் நிலைய சேவைகளை விஸ்தரிக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ஆசன ஒதுக்கீட்டை முற்பதிவு செய்ய வேண்டுமாக இருந்தால் கிளிநொச்சிக்கு அல்லது வவுனியாவிற்கு சென்றே பதிவை மேற்கொள்கிறார்கள். அவ் வசதி மாங்குளத்தில் அமையபெறுமிடத்து மாவட்ட மக்களுக்கு அது அனுகூலமாக அமையும்.

ஆசன ஒதுக்கீட்டினை முற்பதிவு செய்வதற்குரிய வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். அதனைவிட சாதாரண ரயில்கள் நிறுத்தி சென்றாலும் அதிவேக ரயில்கள் குறித்த ரயில் நிலையத்தில் நிறுத்துவதில்லை. அதிவேக ரயில்கள் நிறுத்தப்பட வேண்டும்.

வாகனங்களின் இட ஒதுக்கீடு மற்றையது அதிவிரைவு ரயில்களை மாங்குளத்தில் நிறுத்துவதற்கான முயற்சிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் தீர்மானமாக எடுத்து கொழும்பிலுள்ள ரயில் அதிபர்களுக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும் அவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அவ்விரு சேவைகளும் மாங்குளம் ரயில் நிலையத்திற்கு கிடைக்குமிடத்து முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இன்னும் பெரிதும் நன்மையடைவார்கள் எனத் தெரிவித்தார். (05)

# கிருலப்பனை இறப்பர் தொழிற்சாலை அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு!



கிருலப்பனையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான இறப்பர் தொழிற்சாலையின் பிரதான அலுவலகத்தின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது இறப்பர் தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பணியில் இருந்துள்ளதோடு, அவருக்கு எவ்வித உயிர் சேதமும் ஏற்படவில்லை.

தொழிற்சாலையின் பிரதான வாயிலுக்கு அருகில் மூன்று வெற்று தோட்டாக்களை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பில் கிருலப்பனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

விற்பனையாளர் தேவை
நிறுவனம் : யாழ்முற்றம்
பால் : இருபாலரும்
வேலை நேரம் : காலை 7.00 மணி - மாலை 7 மணி வரை
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு : +94 77 307 8799


காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மயிலத்தமடுவிலிருந்து புத்தர் மட்டுமல்ல சிங்களவர்களும் அகற்றப்படவேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனப் பதற்றத்தையும் அரசியல் முறுகல் நிலையையும் ஏற்படுத்தியுள்ள மயிலத்தமடு மாதவனை மேயச்சல் நிலத்திலிருந்து புத்தர் சிலையை இலங்கை காவல்துறையினர் அகற்றியிருக்கின்றனர். அந்த நிலப் பகுதியை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்கும் அந்த முயற்சிக்கான பாதுகாப்பை வழங்குவதற்குமாக அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

கிழக்கு மாகாணத்திலேயே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய மாவட்டமாக இப்போதைக்கு எஞ்சியிருப்பது மட்டக்களப்பு மட்டுமே. எஞ்சிய இரு மாவட்டங்களான திருகோணமலையிலும் அம்பாறையிலும் கடந்த 3 – 0 ஆண்டுகளில் தமிழர்கள் சிறுபான்மையினராக்கப்பட்டுவிட்டனர். அதனாலேயே மட்டக்களப்பில் புத்தர் சிலைகளும் சிங்களக் குடியேற்றங்களும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துபவையாக இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தையும் சிங்கள பௌத்த மயமாக்கும் திட்டத்துடனேயே பேரினவாதம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான முயற்சியாகவே தமிழர்கள் இப்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதன் முன்னணி முரண்பாட்டுக் களமாக இப்போதைக்கு மயிலத்தமடு மாறியிருக்கின்றது.

மாதவனையைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்களின் தொடர் போராட்டம் மற்றும் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர் அழுத்தம் என்பவற்றின் காரணமாக, மயிலத்தமடு சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திங்கட்கிழமை நடந்த கூட்டத்தில் இணங்கியிருந்தார். அதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டும் இருந்தார்.

உண்மையில் அவர் உத்தரவிடாமலேயே அதிகாரிகள் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கவேண்டும். குறிப்பாக சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையில் காவல்துறையினரே நேரடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் பேரினவாதக் கொள்கைகளால் சீர்கெட்டுக் கிடக்கும் காவல்துறையால் பேரினவாத இலக்குகளோடு செய்யப்படும் இது போன்ற பேரினவாத நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க முடிவதில்லை.

இப்போதுகூட புத்தர் சிலை இரவோடு இரவாகவே அகற்றி அந்த இடத்தில் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பேரினவாதத்திற்குக் காவல்துறையினர் அஞ்சும் நிலையையே அது வெளிக்காட்டி நிற்கின்றது. அரசுத் தலைவரின் உத்தரவுப்படி இன்னமும் அந்த இடத்திலிருந்து குடியேற்றக்காரர்களை வெளியேற்றுவதற்கான சட்ட நடவடிக்கைகள் அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை.

அரசுத் தலைவர் இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை மூலம் சட்டவிரோதக் குடியேறிகளை அகற்றச் சொன்ன தன் பின்னணியே விடயத்தைக் காலதாமதப்படுத்தி இழுத்தடிப்பதுதான். அப்படியிருக்கும்போது, அந்தச் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குக்கூட காவல்துறையினருக்கும் அரச அதிகாரிகளுக்கும் முடியவில்லை அல்லது அவர்கள் விரும்பவில்லை என்பது மிக மோசமானதொரு நிலை. இது அந்தப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தாது என்பதோடு, முறுகல் நிலையையும் சுமுகப்படுத்தாது.

எனவே, அதிகாரிகள் விரைந்து சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றவேண்டும். அப்போதே மயிலத்தமடுவில் உண்மையான அமைதி திரும்பும். நீதியும் நிலைநாட்டப்படும்.

# தப்பு தாளங்கள்

என் சத்திய மூர்த்தி




**சென்னை 19 அக்டோபர் 2023**

பாலஸ்தின பிரச்சினை மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளது. ஹமாஸ் அமைப்பின் தடாலடி தாக்குதலால் இஸ்ரேல் நிலைகுலைந்ததுஎன்னவோ உண்மை. அதை விட முக்கியம், இஸ்ரேல் சரித்திரத்தில் முதல் முறையாக, அந்த நாட்டின் பெயர் பெற்ற மொசாட் உளவு துறை சறுகி உள்ளது. அவற்றை சரிக்கட்டும் வேலையாக, இஸ்ரேலும் காஸா பகுதியில், ஹமாஸ் போராளிகளின் நிலைகளை தாக்குவதாக கூறிக்கொண்டு அங்கு வாழும் அப்பாவி மக்கள் மீதும் மிகப்பெரிய தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இவ்வாறான எதிர் தாக்குதல்களும், அடக்குமுறைகளும், மொசாட் அமைப்பின் தோல்வியை மக்கள் மனதில் இருந்து மறைப்பதற்கு பயன்படும். தற்போது, மொசாட் தோல்வி குறித்து உலக நாடுகள் பேசிவந்ததும் மறக்கடிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் போரை தீவிரவாத தாக்குதல் என்றோ, சுதந்திர போராட்டம் என்றோ வியாக்கியானித்தவர்கள் கூட காஸா பகுதி மக்களின் இழப்புகளும் வேதனைகளும், உரிமைகளும் குறித்து மட்டுமே பேசுகிறார்கள். அதன் ஒரு பகுதியாக, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய 'இரு நாடுகள்' குறிதும் சர்வதேச அரங்கில் விவாதம் மீள் உரு பெற்றுள்ளது.



### எதிர்பார்ப்பும், காரிக்கையும்

மேற்கு ஆசியா பிரச்சினைக்கு இருநாடு தீர்வு தான் முடிவ என்று பேச்சு எழும் போதெல்லாம், இங்கேயும், நம்மவர்களிடையே, இலங்கையில் சிங்களம்-தமிழ் என்று இரு தேசங்கள் உள்ளன. அவற்றை, சர்வதேச சட்டதிட்டங்களுக்கு உள்படுத்தி, இரு தனி நாடுகளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், கோரிக்கையும் எழுவது வழமை.

ஆனால், இந்த முறை பாலஸ்தீன தாக்குதல்கள் அல்லது போர் மூன்று வாரங்களாக தொடரும்போதும், தமிழ்தலைவர்கள் யாரும் தனி நாடு குறித்து பேசவில்லை. இது ஆச்சரியம் தரக்கூடிய விடயம். அதே சமயம், அதுவே வரவேற்கப்படவேண்டிய விடயமும் கூட.

வழமையாக, தனிநாடு குறித்து பேச எந்தவொரு வாய்ப்பையும் நழுவ விடாத புலம்பெயர்ந்தோர் அமைப்புகளும் இந்த முறை, இதுவரையாவது அமைதி காத்து வருகின்றன. இனியும் அவ்வாறே தொடர்வார்கள் என்றால் நல்லது. ஆனால், அதனை எப்போதைக்கும் எதிர்பார்க்க முடியாது என்பதே நிதர்சனம்.

### குனியகுனிய குட்டு

தமிழர்கள் குழம்பி தான் போய் இருக்கிறார்கள். புதிய தலைமுறையினர் 'இரு தேசம்', தனி நாடு ஆகிய இரண்டு கோட்பாடுகளுக்கு அப்பால், அவர்கள் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனப்போர் முடிவடைந்து இன்று பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், தனி நாடு சாத்தியம் இல்லை என்ற உண்மையை உணர்ந்து செயல்படுகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாகவே, பதிமூன்று உள்ளிட்ட வழிமுறைகளில் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற இலக்கில் தற்போது பயணிக்கிறார்கள். ஆனால், குனியகுனிய குட்டு என்பது போல், எப்போதும் இல்லாத அளவிற்கு, தமிழர்கள் மீது கலாச்சார தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன..

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச இதற்கு பிள்ளையார் சுழி போட்டு சென்றிருந்தார். தாராளவாத கொள்கையை போற்றுபவராக தன்னை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே ஆட்சியிலும் அதுவே தொடருகிறது. முன்பு இருந்ததை விட தமிழர் பகுதிகளில் பேரினவாத முன்னெடுப்புகள் அதிகமாகி இருப்பதாக தோற்றமும் ஏற்படுகிறது.

இந்த பின்னணியில், மீண்டும் தனி நாடு கோரிக்கை தமிழர்களிடையே எழுந்தால் ஆச்சரியப்பட தேவையில்லை. ஆனால், எழுபதுகளிலும் எண்பதுகளிலும், அதனை தொடர்ந்து 2009ல் இனப்போர் முடியும் வரையிலும் இருந்த தமிழ் மக்கள் ஆதரவு இருக்குமா, என்ற கேள்வி எழுந்தால், 'இருக்காது' என்ற ஒற்றை சொல்லே பதிலாக இருக்கும்.

### அறிவு செருக்கு

கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள், நாடு சுதந்திரமடைந்த காலகட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். தேசத்தின் அனைத்து மக்களின் அபிலாஷ்-களும் எதிர்பார்ப்புகளும் அவர்களிடமும் இருந்தது. அதை விட குறிப்பாக, அவர்கள் தாய்-தந்தையார் ஊட்டி வளர்க்கப்பட்ட அறிவு செருக்கு அல்லது மமதை இருந்தது.

அந்த செருக்கின் காரணமாகவும், குடா நாட்டையே தாண்டாத அந்த இளைஞர்கள் எல்லோரும் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டி வந்தார்கள். சிங்கள மொழி தெரியாமல் தாங்கள் தலைமுறை தலைமுறையாக போற்றும் அரச பணிகள் தங்கள் பிள்ளைகளுக்கு கிடைக்காது என்று விசனப்பட்ட அவர்களது தாய்-தந்தையர், அவர்களை போராட ஊக்குவித்தார்கள்.

இது தான் தமிழர்களின் இரட்டை வேடம் அல்லது உச்சக் கட்ட குழப்பநிலை. அன்றும் இன்றும் சிங்கள மொழி படிக்க மாட்டேன் என்று மார்தட்டியவர்கள், பின்னர் வாயில் நுழையாத மேலை நாட்டு மொழிகளை கர்வத்தோடு கற்று தேர்ந்தார்கள். சொந்த நாட்டில் உரிமை இல்லை என்று மறுகியவர்கள், திருட்டுதனமாக அயல்நாடுகளில் அகதிகளாக சென்றடைவதை இன்று வரை பெருமையாக பேசிக்கொள்கிறார்கள். இன்று புலம்பெயர்ந்தோர் என்று கூறிக்கொள்வோர் இவ்வாறு, சென்றவர்கள் தானே!

புலம்பெயர்ந்தோர் தலைமைகளிலும், இனப்போர் காலத்தில், விடுதலை புலிகள் அமைப்பின் தற்கொலை படையினருக்கு பயந்து பிற நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழ் தலைவர்களும் இப்போதைகக்கு சாதிப்பதற்கு எதுவும் இல்லை. அவர்கள் இங்கேயே, தங்களது மக்களுடன் தொடர்ந்து வாழ்ந்திருந்தால், அவர்களது அன்றாட அவலங்களில் பங்கெடுத்திருப்பார்கள். அவர்களது மனமாற்றங்களையும் உணர்ந்து அறிந்திருப்பாஜுகள். அடுத்த தலைமுறை தமிழர்களிடமிருந்து தாங்கள் எவ்வளவு தூரப்பட்டிருக்கிறோம் என்பதும் அவர்களுக்கு தெரிந்திருக்கும்.

### தலைமுறை இடைவெளி

அந்த வகையில், ஒரு சில தமிழ் அரசியல் தலைவர்களாவது, தொடர்ந்து யாழ்பாணத்திலும், கிளிநொச்சியிலும், திருகோணமலையிலும் மட்டகளப்பிலும் தங்கள் மக்களோடு மக்களாக வாழ்ந்து வந்தவர்கள் தான். ஆனால், அவர்களும் அடுத்தடுத்த தலைமுறையினரோடு நெருங்கி பழகியது இல்லை. தங்களை சுற்றியே அரசியல் செய்து வரும் அவர்கள் தலைமுறை இடைவெளியை புரிந்து கொள்ளவில்லை. தமிழ் இளைஞர்கள் பலரும் மேலை நாடுகளுக்கு இடம்பெயர்ந்து விடவேண்டும் என்றே கருதி செயல்படுகிறார்கள்.

தங்களது படிப்பு திறன் மூலம் வெளிநாடு செல்ல முடிந்தால் அது நலம். அவ்வாறு இல்லாமல், ஏதோ ஒரு வழியில் ஏதாவது ஒரு மேலை நாட்டில் அகதிகள் முகாம்களில் இடம் கிடைத்தால் கூட, அவர்கள் அதற்கும் தயார். இடைப்பட்ட காலத்தில், இங்கு போராட்டம் என்ற பெயரில், பொலிஸ் ஸ்டேனிலும் நீதிமன்றுகளிலும் அவர்களது பெயர்கள் பதிது செய்யப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை.

இனப்பிரச்சினையின் பழைய-புதிய பரிமாணங்கள் எல்லாம், தமிழ் தொலைகாட்சி, யூற்யூப் மற்றும் சமூக வலைதள விவாதங்களோடு முடிந்து விடுகின்றன. நாளையே, ஏதோ ஒரு விதத்தில் தமிழ் போராட்டம் பெரிதானால், அதன் காரணமாக பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், இந்த இளைஞர்கள் மீது அராஜகத்தை மீண்டும் கட்டவிழ்த்து விட்டால், அவர்கள் அனைவருமே ஏதோ ஒரு வழியில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று

(6ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalāikkathir




# இரவின் இனிமையில் ஒளியை நாடும் பெரும் திருவிழா

மனிதன் எப்போதும் ஒளியைத் தேடுகின்றான். ஆனால் ஒளியிலேயே நீண்டகாலம் அவனால் வாழமுடியாது. இருளைக் கண்டு அவன் அஞ்சுகிறான், ஆனால் இரவு தரும் உறக்கத்திற்காக, ஓய்விற்காக அவன் அதை நாடியே ஆகவேண்டும். இயற்கையின் விசித்திரம் இது. உயிர்கள் அனைத்தும் ஓய்ந்து, லயமடையும் காலம் இரவு. இரவின் ஆழ்ந்த உறக்கத்தில் மனித மனம் அறிந்த உலகில் இருந்து அறியாத உலகத்திற்குப் போகிறது, மீண்டும் அறிந்த உலகிற்குத் திரும்புவதற்காக.

இரவு அச்சமூட்டுவது, வசீகரிப்பது, மர்மங்களும் ஆழ்ந்த அமைதியும் கொண்டது. அதனால் தான் நம் மரபில் இரவைப் பெண்ணாக, தேவியாக உருவகித்தார்கள் போலும்! 'ராத்ரி' என்ற சொல்லுக்கு ஓய்வும் அமைதியும் அளிப்பவள் (ரா+த்ரி) என்று சம்ஸ்கிருதத்தில் பொருள் உண்டு.

இரவும், அதன் இயல்பான இருளும் ஆக்கம், அழிவு இரண்டுக்குமே காரணமாகின்றன. இந்து சிந்தனை மரபில் சிருஷ்டி, பிரளயம் ஆகிய இரண்டையும் பற்றிக் கூறும் தத்துவ வெளிப்பாடுகளிலும், கவிதைகளிலும் இருள் குறிப்பிடப் பட்டுள்ளது. பிரபஞ்ச சுழற்சியில் மாறி மாறித் தொடரும் முடிவின்மையின் இரு கூறுகளே ஒளியும், இருளும் - ஆக்கமும், அழிவும் என்பதை நம் சிந்தனை மரபு ஆதியிலேயே கண்டுகொண்டது.

இருள் இருளால் மூடப்படிருந்த வெளி ஏதுமின்மையால் வேறுபாடற்றிருந்த, எங்கும் நீராக இருந்த வெளி முடிவற்ற வெம்மையால் (தவத்தால்) தானே இருப்பாக (சத்) ஆகியது.

ரிஷிகள் தங்கள் அகத்துள் தேடி
இன்மையில் (அசத்) இருப்பைக் (சத்) கண்டனர்.
அதன் ஒளிக் கதிர்கள் இருளில் விரிந்தன..

நவராத்திரம் - ஒன்பது இராத்திரிகள். பராசக்தியான ஜகன்மாதாவைப் பூசிக்கும் விடேமான காலம் இந்த ஒன்பது நாட்களாகும். பிரபஞ்சத்தின் இருப்பிற்குக் காரணமான மகாமாயையின் மகிமையின் விளைவல்லவோ இது? இந்த மகா மாயையே உலக நாயகனின் யோக நித்திரையாகிறாள். அவளால் உலகம் மயக்கப் படுகிறது. ஞானிகளுடைய சித்தங்களையும் தேவி பகவதி வலுவில் கவர்ந்து மோகத்தில் செலுத்துகிறாள்.





அதனால் அல்லவோ அசைவதும், அசையாததுமான இந்த சராசரம் சிருஷ்டிக்கப் படுகிறது! (தேவி மகாத்மியம் 1.54-56)

**கால ராத்ரி: மஹா ராத்ரி: மோஹ ராத்ரிஸ்ச தாருணா த்வம் ஸ்ரீ: த்வம் ஈஸ்வரீத்வம் ஹ்ரீ: த்வம் புத்தி: போதலக்ஷணா**

**காலமாகிய இரவும், பேரிரவும், மோகமாகிய இரவும், பயங்கர வடிவினளும் நீயே.**
**நீயே திரு, நீயே இறைவி, நீயே இதயம், நீயே தெளிந்த அறிவு.**
**(தேவி மகாத்மியம் 1.79)**


இந்த ஆழ்ந்த ஆன்மிகத் தத்துவ வெளிப்பாடுகளை புராண செய்திகளோடு கலந்து நடைமுறையில் நாம் உள்வாங்கிக் கொள்வாதற்காகவே நவராத்திரிஎன்றஅற்புதமானபண்டிகை ஏற்பட்டுள்ளது. பாரத தேசம் முழுதும் ஒன்பது இரவுகள் கொண்டாடப் படும் இந்தப் புராதன பண்டிகை சரத்காலே மஹாபூஜா க்ரியதே யா ச வார்ஷிகீ (சரத்காலத்தில் வருடம் தோறும் கொண்டாடும் மகாபூஜை) என்று தேவி மகாத்மியத்திலேயே (12.12) குறிப்பிடப் படுகிறது. உலக வாழ்வில் பிடிப்பையும், செயல்திறனையும், மகிழ்ச்சியையும், நல்நெறிகளையும் வேண்டி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகியவற்றின் உருவகமாக மகா துர்க்கா , மகா லக்ஷ்மி, மகா சரஸ்வதி ஆகிய மூன்று தேவியரையும் வணங்குகிறோம்.

தத்துவ நோக்கில், மூலப் பிரகிருதியின் முக்குணங்களாக உள்ள தாமச குணம் (இருள் இயல்பு), ராஜஸ குணம் (செயலூக்க இயல்பு), சத்துவ குணம் (நல்லியல்பு) இவை மூன்றையும் கடந்து சென்று ஒருமை நிலையை அடைவதற்காக மூன்று தேவியரின் தியானம் என்றும் கூறுவர். தாந்திரீக நெறிகளில் நவராத்திரியின் ஒவ்வொரு இரவுக்குமான பல்வேறு சாதனைகளும், வழிபாட்டு முறைகளும் கூறப்பட்டுள்ளன.

பெண்மைக்கு ஏற்றம் தரும் இத்திருவிழா பெண்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை செய்து கொள்ளும் விழாவாகவும், ஊரெங்கும் மகிழ்ச்சிக் களியாட்டங்களும், ஆரவாரமும் பொங்கும் விழாவாகவும் உள்ளது. தீமையை தெய்வீக சக்தி வெற்றி கொண்ட திருநாளாக இறுதி நாளான விஜயதசமி விளங்குகிறது.


இந்த புண்ணியமான காலத்தில் பராசக்தியை வழிபடுவோம். சக்தி பரவ பிரார்த்திப்போம்.

**தி. மயூரகிரிக்குருக்கள்**



# வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல முழு நாட்டையும் மீட்க பழைய பகைமைகளை மறந்து வாருங்கள்!

## எல்லே குணவங்ச தேரர் அழைப்பு



நாம் வழங்கிய அதிகாரத்தை கைம்மாற்றியுள்ளனர். இழந்த சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் போராட வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல முழு நாட்டையும் மீட்பதற்கு வாருங்கள். பழைய பகைகளை மறந்து இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்காக அனைவரும் இணைய வேண்டும் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் உப தலைவர் சட்டத்தரணி எல்.எஸ்.என். பெரேரா எழுதிய ஈழ மூட நம்பிக்கையின் வெளிக்கொணர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எண்ணெய் தாங்கி விற்பனை செய்யப்பட்டமைக்கு வழக்கு தாக்கல் செய்தேன். சிங்கராஜா வனத்தில் உள்ள பகுதிகளை விற்பனை செய்யப்பட்டமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். ரெலிகோமை விற்கப் போவதாக அரசாங்கம் கூறுகிறது. ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை வழங்கப் போவதாகக் கூறினர். சுயாதீன தொலைக்காட்சியை விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர்.

அரசாங்க கட்டடம் விற்பனைக்குள்ளது. பொலிஸ் தலைமையகம் விற்பனைக்குள்ளது. விமானப்படை தலைமையகமும் விற்பனைக்குள்ளது. தபாலகம் உட்பட ஹோட்டல்களும் விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்தால் என்ன மிகுதியாக இருக்கப் போகிறது.

இந்தப் பிரச்சினையே தற்போது உள்ளது. வளங்களை ஏலத்தில் விடும் அரசாங்கங்களே ஆட்சியில் உள்ளன. ஏலத்தில் விடுபவர் அல்லர் நாட்டுக்குத் தலைவராகத் தேவைப்படுகிறார். 69 லட்சம் மக்கள் வாக்களித்தனர். அந்த 69 லட்சம் பேருமே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். 13 திருத்தின் ஊடாக காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமாயின் வழங்குபவர் பொறுப்பு கூற வேண்டும்.

அதுவே எனது நிலைப்பாடு. ரணில் விக்கிரமசிங்கவால் அந்த இடத்துக்கு வரமுடியவில்லை. நாம் வழங்கிய அதிகாரத்தை கைம்மாற்றியுள்ளனர். அனைவரும் நன்கு ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். இம்முறை இலகுவானது அல்ல. எவரும் கதைப்பதில்லை. அவன் திருடினான். இவன் திருடினான் அதேயே கூறிக்கொள்கின்றனர்.

நான் வடக்கில் உள்ள தமிழ் சகோதரர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல. முழு நாட்டையும் மீட்பதற்கு வாருங்கள். உங்களுக்கும் இல்லை. எங்களுக்கும் இல்லை. வாருங்கள் சுதந்திரப் போராட்டத்தை போன்று சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக போராட வேண்டியுள்ளது. இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்காக அனைவரும் இணைய வேண்டும். பழைய பகைகளை மறப்போம்.என்றார். (05)

# தப்பு தாளங்கள்..........



(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறிவிடுவார்கள். அதை தானே பேரினவாதிகள் எதிர் பார்க்கிறார்கள்.

**வேறுவேறு சரித்திரம்**

இத்தகைய சூழ்நிலையில், தமிழ் அரசியல் தலைமைகளாவது, அல்லது புலம் பெயர்ந்தோர் அமைப்புகளாது, பாலஸ்தீன பிரச்சினையுடன் இனப்பிரச்சினையை ஒப்பிட்டு, தாங்களும் தங்களது போராட்டங்களை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்று கருதிவிடக்கூடாது. அது போன்றே, பாலஸ்தீன மக்களுக்கு உலகநாடுகள் பலவற்றின் அனுதாபமும் ஆதரவும் இருக்கிறது என்று கருதி, அதுவே இங்கும் நடக்கும் என்றும் கணக்குபோடகூடாது.

காரணம், இரண்டு மக்களின் சரித்திரமும் வேறுவேறு. அல்லது, அவ்வாறு தான் சர்வதேசம் கருதுகிறது. தற்போது கூட அமெரிக்கா உள்பட்ட மேலைநாடுகள், இஸ்ரேலை ஆதரிக்கிறது. ஆனால், அவர்களும் கூட அந்த நாட்டின் தொடர்குண்டுதாக்குதல்களை எதிர்த்தே பேசி வருகின்றன.

முன்பு போல் இல்லாமல், தற்போது, பாலஸ்தீன மக்களின் தேசிய உரிமையை அவர்கள் யாருமே மறுக்கவில்லை. பாலஸ்தீன நாட்டில், அவர்களை கேட்காமலே இஸ்ரேலை ஒண்டு குடித்தனமாக கொண்டு உட்கார்த்தி வைத்தது அந்த மேலைநாடுகள் தான். ஆனால் அந்த நாடுகளில் கூட தற்போதைய தலைமுறையினர் பாலஸ்தீன மக்களின் அவலங்களுக்கு முடிவு கோருகிறார்கள்.

இலங்கையில் நிலைமை வேறு. இங்கு, 'ஒரு நாடு, இரு தேசம்' என்ற தமிழரின் கோரிக்கையை சர்வதேசம் ஆதரிக்கவில்லை. பாலஸ்தீனம் போல் இல்லாமல், இங்கு, சிங்களவர்கள் தமிழர்களின் நிலத்தை முழுமையாக பறித்துக்கொண்டு அங்கே தங்களது நாட்டை உருவாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டு இல்லை.

அவ்வாறு அங்கு செய்ததே இந்த மேலைநாடுகள் தான். மாறாக, அவர்களது கணக்கில், இலங்கை தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. அதற்கான தீர்வை மட்டுமே பெற்றுக் கொடுக்கவேண்டும். இது தான் அவர்களது 'அப்லோச்'.

இந்த பின்னணியில், தமிழர்கள், இங்கும் சரி, சர்வதேச பரப்பிலும் சரி, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்துக் கொண்டிருக்க கூடாது. ஆனால், அவர்கள் அதனை தான் தொடர்ந்து செய்து வந்திருகிறார்கள். தங்களது தேவை வேறு, சர்வதேசத்தின் முன்னெடுப்புகள் வேறு என்ற அடிப்படை உண்மையை கூட உணர்ந்து கொள்ளாமல், கடந்த காலங்களில் தப்பு தாளங்கள் போட்டு வந்தார்கள். தற்போதும் அதனையே தொடரகூடாது.



காலைக்கதிர் Kalaikkathir

# காலநிலைக்கு ஏற்ற விவசாயத்தை நோக்கிய அவசர நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுப்பு!

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் ஆகியன இணைந்து இலங்கையில் நிலைபேறான மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாயத்தை நோக்கிய அவசர நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்து உலக உணவு தினத்தைக் கொண்டாடியது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் ஐ.நா. நீர் ஆகியன ஒன்றிணைந்து 2021 ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் நன்னீர் வளங்கள் மற்றும் அவற்றின் நிலைத்திருக்கும் தன்மையின் மீதான மனித நடவடிக்கைகளின் கணிசமான அழுத்தத்தை பிரதிபலிக்கும் வகையில் 90.8 வீத குறிகாட்டியுடன் இலங்கை 'உயர் நீர் அழுத்தத்துக்கு உள்ளானதாக' வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில்பெறப்படும்மொத்தநன்னீர் வருடாந்தம் 12.95 பில்லியன் கனமீற்றர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நன்னீரில் 82 வீதம் நெல் நீர்ப்பாசனத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது மற்றும் 5 வீதத்திற்;கும் அதிகமான அளவு மற்ற பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

உலகளாவிய காலநிலை இடர் சுட்டெண்ணில், குறிப்பாக நீர் வளங்கள் மீதான தாக்கத்துடன் தொடர்புடைய காலநிலை அபாயங்களின் அடிப்படையில் இலங்கை தொடர்ந்து உயர்நிலையில் உள்ளது.

இதை கருத்தில் கொண்டு, ஐ.நா உணவு முகவர்கள் இலங்கை விவசாய உணவு முறைகளை மாற்ற வேண்டியதன் அவசியத்தை கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரபங்குபற்றியஉலகஉணவுதினத்தை நினைவுகூரும்நிகழ்வில்வலியுறுத்தினார்கள். இந்நிகழ்வு, முகவர்களால் ஆதரிக்கப்படும் நவீன அணுகுமுறைகள், நிலைபேறான மற்றும் காலநிலை - எதிர்ப்பு விவசாயத்தை நோக்கி தேசிய அளவிலான வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டுகிறது. இளம் காலநிலை ஆர்வலர் தாரிகா பெர்னாண்டோவின் விவாதங்கள், கலை மற்றும் சிறப்பு உரை போன்ற நிகழ்வுகள் மூலம் இளைய தலைமுறையினரின் குரல்கள் வெளிப்படுத்தப்;பட்டன.

அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பை அடைவதில் இலங்கையின் தளராத அர்ப்பணிப்பினை கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் உரை மீண்டும் உறுதிப்படுத்தியது.

விவசாயம்மற்றும்உணவுப்பாதுகாப்பின் முக்கியத்துவத்தை தேசிய முன்னுரிமைகளாக வலியுறுத்திய அவர், எதிர்காலத்தில் காலநிலையால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். இந்த முயற்சியில் ஐ.நா. உணவு முகவர்கள் வழங்கிய விலைமதிப்பற்ற தொழில்நுட்ப ஆதரவுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

நிகழ்வில் பேசிய ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச், 'அதிகரித்துவரும் நீர் அழுத்தம் மற்றும்காலநிலைபாதிப்புகளைஎதிர்கொள்ளும் போது, நிலைபேறான மற்றும் காலநிலை-எதிர்ப்பு நடைமுறைகளை மேற் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கையுடன் இணைந்து அதன் நீர் மற்றும் உணவு அமைப்புக்களை பலப்படுத்துவதற்கு தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அனைவருக்கும் போது மான மற்றும் போசாக்கான உணவு கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது' எனக்குறிப்பிட்டார்.



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான எவ்.ஏ.கியு. பிரதிநிதி விம்லேந்திர ரன், இலங்கையின்விவசாயஉணவுமுறைகளை மாற்றியமைக்க உதவுவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார். 'எதிர்வரும் தலைமுறைகளுக்கு இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இலங்கையின் விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகள் காலநிலையைத் தாங்கக்கூடியவை என்பதை உறுதிப்படுத்த, அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எவ்.ஏ.கியு. உறுதிபூண்டுள்ளது. கழிவுகள், மாசுபாடு மற்றும் காலநிலை பாதிப்புகளைக் குறைக்க நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் மீனவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்,' என்று குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐ.எவ்.ஏ.டி. இன் வதிவிடப் பணிப்பாளர் ரினா தபஸ்ஸம், 'காலநிலை மாற்றம் விவசாயத்திற்கான நீர் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. சிறு அளவிலான விவசாயிகளுக்கு சில சமயங்களில் போதிய நீர் கிடைக்காமலும் ஏனைய சமயங்களில் அதிகமான நீரும் கிடைக்கின்றது. இது நீர்ப்பாசன அமைப்புக்களை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகிறது. எனவே சிறிய அளவிலான விவசாயிகள் தடையற்ற நீர் விநியோகத்துடன் உணவைத் தொடர்ந்து உற்பத்தி செய்யலாம். விவசாயிகள் சூரிய சக்தியில் இயங்கும் தொட்டிகள் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அணுகுவதற்கும், அருவி முறை தொட்டி அடுக்கு அமைப்புகள் போன்ற நீர் சேமிக்கும் பாரம்பரியமுறைகளைமறுசீரமைப்பதற்கும் ஐ.எவ்.ஏ.டி. ஆனது அரசாங்கம் மற்றும் விவசாய சமூகங்களுடன் இணைந்து செயல்படுகிறது. இதனால் விவசாயிகள் வருடம் முழுவதும் விவசாயம் மேற்கொள்வதுடன் குறைந்த விளைதிறனுள்ள விவசாயத்திலிருந்து நாட்டிற்கு உணவழிக்கக்கூடிய நீர்ப்பாசன விவசாயத்திற்கு செல்வதற்கு உதவுகின்றது.

'அண்மைக்காலமாக உணவுப் பாதுகாப்பானது முக்கிய விடயமாகவுள்ளது. ஆனால் நீர் பாதுகாப்பு இல்லாமல் உணவுப் பாதுகாப்பு இல்லை என்பதை நாங்கள் அடிக்கடி மறந்து விடுகிறோம்' என இலங்கையின் டபிள்யு.எவ்.பி. இன் பொறுப்பாளரும் அதிகாரியுமான ஜெரார்ட் ரெபெல்லோ கூறினார். டபிள்யு.எவ்.பி., தங்கள் பங்காளர்களுடன் சேர்ந்து, உணவு முறைகளை மிகவும் நிலைபேறானதாகவும், தீவிர வானிலை நிலைமைகளுக்கு தாங்கக்கூடியதாகவும் மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உதவுகின்றது, சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியத்துவம் அளிக்கிறது, இதனால் ஆண்டு முழுவதும் வயலிலிருந்து மேசைக்கு உணவானது தடையின்றி கிடைக்கிறது. ஐக்கிய நாடுகளின் அமைப்புடன் எவ்.ஏ.கியு., ஐ.எவ்.ஏ.டி. மற்றும் டபிள்யு.எவ்.பி. ஆகியன இணைந்து இலங்கையில் உணவுப் பாதுகாப்பிற்கான நிலைபேறான மற்றும் காலநிலை - தாங்குதிறன் கொண்ட அணுகுமுறைகளை தீவிரமாக ஊக்குவித்து வருகின்றன. (05)



# இராணுவம், பொலிஸ் புலனாய்வினர் வியாபாரிகளை மிரட்டுகின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கேட்டுஇடம்பெறவுள்ளஹர்த்தால் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

20 ஆம் திகதி ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின்ஊடாகமுன்னுக்கு வந்தவர்கள். போராட்டத்தின் குணாதிசயங்களை கொண்டவர்கள். இருந்தாலும் நீதித்துறை, நில அபகரிப்பு, புத்த கோவில்களுடைய ஆக்கிரமிப்பு என்பன வடக்கு - கிழக்கில் மிக மோசமாக நடந்து வருகின்றன. எங்களது மக்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக எங்களுடைய மக்களின் வரலாற்றை சிதைக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் இந் தக் கர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.



எமது மக்கள் போராட்டத்தின் ஊடாக வந்தவர்கள். ஆகையால் இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அன்றாடம் உழைக்கின்ற மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுகிறது. தற்போது புதிதாக அடாவடித் தனமான, ஜனநாயக விரோத மான செயற்பாடு நடக்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ்புலனாய்வுத்துறையினர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறுதொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை கர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள். அதற்கு எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள். அரசாங்கம் கூடுதலான திணைக்களங்கள் மற்றும் பிக்குகளை வைத்து எமது மக்களை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கிறது. தொடர்ந்தும் கர்த்தாலை நடத்த முடியாது. இது ஒரு கடைசியான கர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தார். (05)

# ஏ.டி.எம். இயந்திரத்தை உடைத்து பணம் கொள்ளையிட்ட மூவர் கைது!

புத்தளம் - மதுரங்குளி பிரதேசத்திலுள்ள வங்கியொன்றில் பணம்பெறும் தானியக்க இயந்திரத்தை உடைத்து பணத்தை கொள்ளையடித்த குற்றத்திற்காக தேடப்பட்டு வந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி குறித்த பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் பணம் பெறும் தானியக்க இயந்திரத்தில் இருந்து 10,549,000 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கந்தளாய் – சூரிய ஏரி வான்கதவு உடைப்பு: பல வீடுகள் மற்றும் வீதிகள் நீரில் மூழ்கின!

சீரற்ற காலநிலையால் கந்தளாய் பிரதேசசெயலகத்துக்குட்பட்ட சூரியபுர பகுதியிலுள்ள சூரிய ஏரியில் இருந்து காந்தி ஏரிக்கு நீர்வழங்கும் வான் கதவு உடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் குறித்த பிரதேசத்தில் உள்ள பல வீடுகள் மற்றும் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

அதனையடுத்து, ஏரியிலிருந்து பாயும் நீரைக் கட்டுப்படுத்தவும், வீடுகளிலும் வீதிகளிலும் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்கவும் பாதுகாப்பு படையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து மணல் மூடைகளை அடுக்கி வருகின்றனர். இந்நிலையில், கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் இது குறித்து கூறுகையில் -

வான்கதவு பொருத்தப்பட்டிருக்கும் இடத்தில் காட்டு யானைகள் வழமையாக நடமாடுவதாலும் தற்போதைய சீரற்றகாலநிலைகாரணமாகவும் இந்த வான் கதவு உடைந்திருக்கக்கூடும். - என்றார். (05)

# வெலிக்கந்தையில் மனித எச்சங்களுடன் பெண்ணின் ஆடைத் துண்டுகளும் மீட்பு!

வெலிக்கந்தை - குடாபொக்குன வனப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் மனித எச்சங்களுடன் பெண்ணின் ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வெலிக்கந்தை பிரதேச பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொண்டசோதனைநடவடிக்கையின் போது மனித எச்சங்கள், பெண்ணின் ஆடை, தலைக்கவசம் மற்றும் உணவு பொதியின் துண்டுகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த எச்சங்கள் கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி வெலிகந்தை பிரதேசத்தில் காணாமல்போன பெண்ணினுடையதாகஇருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பிலான விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள்: சமூக அக்கறையின்மையும் ஒரு காரணம்!

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

சமூக நடத்தைகளே பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கான பிரதான காரணம் என தேசிய ஆபத்தான ஔடத கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

சமூகம் குறித்த போதிய அறிவும் புரிந்துணர்வும் இல்லாதமையும் பெற்றோர்களின் ஆதரவு இல்லாதமையும் சிறுவர்கள் பாதிக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது எனதேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை தலைவர் சக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பல்வேறு அமைப்புகளால் அடையாளம் காணப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற சமூகத்திற்கு சமூகம் வேறு அணுகுமுறைகளைக் கையாள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடும்பங்கள், உற வினர்கள் போன்ற உள்ளக சமூகம் சிறுவர்களிற்கு போதைப் பொருள்களின்ஆபத்துக்கள்குறித்து தெரிவிக்கவேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் சிறுவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள் தொலைக்காட்சி விளம்பரங்கள் போன்றவற்றிற்கு அடிமையாகாமல் அவற்றை தவிர்க்கும் உறுதியான மனோநிலை பெற்றவர்களாக மாற்றலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட அமுலாக்கல் மற்றும் கல்விமுறையில் தொடர்ச்சியாகக் காணப்படும் பலவீனங்களால் நகர்புறங்களில் போதைப்பொருள் வர்த்தகர்கள் அதிக பணத்தை சம்பாதிக்கின்றனர். பெருமளவு விற்பனை செய்கின்றனர் என குறிப்பிட்டுள்ள அவர், கடந்த சில மாதங்களில் சில சம்பவங்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (05)

# மகளை பாம்பு தீண்டியதை அறியாத தாய் அழற்சியைப் போக்க மருந்து கொடுத்தார்!

## வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற மாணவி இறப்பு

பாம்பு கடித்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட 11 வயதான பாடசாலை மாணவி உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம, கொடகம பிரதேச பாடசாலை ஒன்றில் 6 ஆம் தரத்தில் கல்வி கற்ற சமன்மாலி என்ற 11 வயது மாணவியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவி தனது உறவினருடன் கடைக்கு சென்று கொண்டிருந்த போது வீதியில் வைத்து அவரை பாம்பு கடித்துள்ளது.

பின்னர், தனது தாய் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தபோது, தனக்கு வாந்தி மற்றும் வயிற்று வலி உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அப்போது தாய் பாம்பு கடித்ததை அறியாமல் தனது மகளுக்கு இரைப்பை அழற்சி இருக்கலாம் என நினைத்து மருந்து கொடுத்துள்ளார்.

இதன்போது மாணவி வாந்தி எடுத்து மயங்கி வீழ்ந்ததால் உடனடியாக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இரண்டு நாள்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (05)

# நுகேகொடையில் விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி, நடத்துநர் தப்பியோட்டம்!

நுகேகொடையில் பஸ் ஒன்றும் ஜீப் ஒன்றும் மோதிக்கொண்ட சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் சிலர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோமாகமவிலிருந்து கோட்டை நோக்கி பயணித்த பஸ் ஒன்று மற்றுமொரு பஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டபோது முன்னாள் வந்த ஜீப்புடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)





# வெடிபொருட்கள், ஆயுதங்கள் மீகஹதென்னவில் கைப்பற்றல் ஒருவர் கைது

மீகஹதென்ன, மல்லிகாகொட பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள், வெடிபொருள்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் மீகஹதென்ன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லிகாகொட, மஹாகலுபான பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேக நபரின் வீட்டிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, வாள்கள், கத்திகள், எயார் ரைபிள், வெற்றுத் தோட்டாக்கள் உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தி வருவதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர். (05)

# மதுபானசாலை அமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

நோர்வூட் பிரதேச சபைக் குட்பட்ட டிக்கோயா, சலங்கந்தை - ஒட்டரி பிரிவில் மதுபானசாலை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டமும், பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

ஆன்மீக தலைவர்கள், இளைஞர்கள், ஊர் மக்கள் இணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மதுபானசாலைக்கான அனுமதியை இரத்து செய், வேண்டாம், வேண்டாம் மதுபானசாலை வேண்டாம் என கோஷங்களை எழுப்பியவாறு ஒட்டரி பகுதியில் இருந்து டிக்கோயா நகர் வரை மக்கள் பேரணியாக வந்தனர்.

'மலையகம் தற்போதுதான் மாற்றம் கண்டு வருகின்றது. எமது சமூகமாற்றத்துக்கு இந்த மதுபானசாலைகள் பெரும்தடையாக உள்ளன. எனவே, எமது பகுதிக்கு மதுபானசாலை வேண்டாம்.' என இளைஞர்கள் தெரிவித்தனர். (05)



# பாடசாலைக்குசென்ற ஆசிரியையிடம் தினியாவலவில் கொள்ளை முயற்சி

## சமயோசிதமாக செயற்பட்ட ஆசிரியை

தினியாவல பிரதேசத்தில் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியையிடம் மோட்டார்சைக்கிளில்வந்தஇனந்தெரியாத இருநபர்கள்அவரதுதங்கமாலையை பறிக்க முற்பட்ட போது ஆசிரியை தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆசிரியர் பாடசாலைக்குச் செல்லும்வழியில்இனந்தெரியாதஇரு நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து வீதி வழியால் ஆசிரியர் பயணித்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி அவரது தங்க மாலையை பறிக்க முற்பட்ட போது ஆசிரியர் அவரது நகையை கையில் எடுத்து கொள்ளையர்களின் மோட்டார் சைக்கிளை கீழே தள்ளிவிட்டு தப்பிச்சென்றுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில், ஆசிரியர் சமயோசிதமாக செயற்பாட்டுள்ளார் எனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் கூறினர். (05)

# முகமாலை பகுதியில் விசமிகளால் வீடு சேதம்;சொத்துக்கள் நாசம்!



முகமாலை பகுதியில் வீடு ஒன்று இனம் தெரியாத விமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

கடந்த 45 நாள்களுக்கு முன்னர் வன்முறை சம்பவம் ஒன்ற இடம் பெற்றிருந்ததாகவும் அதில் ஒருவர் மரணம் அடைந்திருந்தார் எனவும், அவரது 45 ஆம் நாள் நினைவு செவ்வாய்க்கிழமை இடம் பெற்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரது வீடு மீதே செவ்வாய் இரவு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை கடந்த 45 நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களில் பலர் கைதுசெய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; எனவும் அறிய முடிகின்றது. (05)

# செப்ரெம்பரில் தேயிலை உற்பத்தி 12 சதவீதத்தால் வீழ்ச்சி அடைவு

இலங்கையில் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டு செப்ரெம்பருடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு 12 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாகஇலங்கை தேயிலைசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் 21 230 665 கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப் பட்டுள்ள போதிலும், இவ்வாண்டு 18 723 511 கிலோ கிராம் தேயிலையே உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 507 154 கிலோ கிராமால் குறைவடைந்துள்ளதாக தேயிலை சபை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் தேயிலை உற்பத்தி குறைவடைந்துள்ள போதிலும், கடந்த ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் உற்பத்தி சற்று அதாவது 0.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஆண்டு 9 மாதங்களில் 192 774 340 கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் முதல் 9 மாதங்களில் இந்த எண்ணிக்கை 193 235 339 கிலோகிராமாக அதிகரித்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. (05)

# போலி ஆவணங்களை தயாரித்த குற்றச்சாட்டு: மற்றைய சந்தேக நபருக்கும் விளக்க மறியல்!

போலி ஆவணங்களை தயாரித்த குற்றச்சாட்டில் முதலில் கைதுசெய்யப்பட்ட கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தொடர்பான வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேக நபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் அண்மையில் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் மற்றைய சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# 8 மாதங்களில் 21 ஓட்டோக்களைத் திருடி விற்றவர் தெமட்டகொடையில் கைதானார்!

கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஓட்டோக்களைத் திருடி பேஸ்புக் ஊடாக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை பெண்களுடன் செலவிட்ட ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக தெமட்டகொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் 8 மாதங்களில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 21 ஓட்டோக்களைத் திருடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறைந்த விலைக்கு ஓட்டோக்களை விற்பனை செய்ய கிரிபத்கொடைக்கு ஒருவர் வந்துள்ளார் எனத் தெமட்டகொடை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் கபில பண்டாரவுக்கு தகவல் கிடைத்ததனையடுத்து, சந்தேக நபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போது இந்த திருட்டுச் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# புடைவை கடையில் திருடிய போலிப் பொலிஸார் கைது

## யாழில் சம்பவம்

யாழில் பொலிஸ் அதிகாரிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட நான்கு பேர் புடைவைக்கடையொன்றில் 23 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கந்தர்மடம் பகுதியில் உள்ள கடை ஒன்றிலேயே புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த கடையினுள் நுழைந்த அவர்கள் அங்கு போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகத் தமக்கு ரகசிய தகவலொன்று கிடைத்துள்ளதாகக் கூறி அங்கு சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போதுஅங்கிருந்த23,000ரூபாவை எடுத்துக் கொண்டு அங்கிருந்தவர்களை மிரட்டிவிட்டுச்சென்றுள்ளனர்.இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# ஊடகவியலாளர் நிமலராஜனின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தல்!



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வியாழக்கிழமை) அனுஸ்டிக்கப்பட்டன.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

போர்சூழலில்யாழில்இருந்து ,துணிவாகஊடகப்பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை , வீரகேசரி , ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

இந்நிலையில் கடந்த 2000ஆம் அவரது வீட்டுக்குள் அத்துமீறிநுழைந்தஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு, அவரது வீட்டின்மீதும் கைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)




# தமிழக கடற்தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஒரு துன்பியல் நிகழ்வு ஆகும்

## வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு வருத்;தம்

தமிழக கடற்தொழிலாளர்கள் கடலில்வைத்துதாக்கப்பட்டசம்பவம் ஒரு துன்பியல் நிகழ்வு என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே

அந்தக் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தமிழக கடற்தொழிலாளர்கள் மீது கடலில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் இங்குள்ள சிலரின் தூண்டுதலாலேயே நடைபெற்றது என்றும் கூறினார். (05)

# ஜம்போ கச்சானின் விளைச்சல் வீழ்ச்சி!

வடக்கில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக ஜம்போ கச்சானின் விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைபிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட நாதன்குடியிருப்பு, பிரமந்தனாறு, உழவனூர் ஆகிய பகுதிகளிலேயே இந்த ஜம்போ கச்சான் செய்கைக்கு மேற்கொள்ளப்படுகிறது. குறித்த பகுதிகளில் கச்சான் பயிர் செய்கைக்கு சிறந்த இடங்களாகக் காணப்படுகின்றன.

கடந்த வருடம் ஜம்போ கச்சான் செய்கையில் பாரியளவு விளைச்சலால் விவசாயிகள் அதிக இலாபம்பெற்றிருந்தனர். ஆனால், இந்த வருடம் இந்தநிலைமை அப்படியே தலைகீழாக மாறியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக ஜம்போ கச்சான் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனால், சில விவசாயிகள் ஜம்போ கச்சான் அறுவடையை செய்யாது கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஜம்போ கச்சான் தற்பொழுது நான்கு மாதம் கடந்த நிலையில் அறுவடை செய்ய முடியாத நிலையில், கச்சானின் விளைச்சலும் பாரிய வீழ்ச்சியாகக் காணப்படுகிறது.

பல லட்சம் ரூபா செலவழித்து ஜம்போ கச்சான் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் ஒருகிலோ கச்சானைக் கூட இவ்வருடம் விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட தங்களுக்கு உரிய அதிகாரிகள், நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மக்கள்போராட்ட இயக்க ஏற்பாட்டில் யாழில் கையெழுத்துப் போராட்டம்!

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) மேற்கொள்ளப்பட்டது.

நேற்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் குறித்த கையெழுத்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'ஐ.எம்.எப். மரணப்பொறியை தோற்கடிப்போம்' 'ரணில் -மோடி திருட்டு ஒப்பந்தம் வேண்டாம்' எனும்தொனிப்பொருளில்குறித்த போராட்டம்மேற்கொள்ளப்பட்டது. (05)



# வவுனியா பஸ் நிலையத்தில் முதியவரின் சடலம் மீட்பு

*வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலமொன்று நேற்று (வியாழக்கிழமை)அமீட்கப்பட்டுள்ளது.*

*நேற்று அதிகாலை அந்த பஸ் நிலையத்திற்கு வருகை தந்த பயணிகளே இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.*

*இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர.*

*(05)*


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2023இல் வெளியிடப்பெற்றது.